# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093862

1. District : DVAC மாவட்டம் | PS DVAC HQS காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 4 மு.த.அ. எண் | Date: 19.2.19 நாள்

2. (i) Act சட்டம்: CrPC | Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: (Amendment Act) (2018) | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 18.02.19 | Date to நாள் வரை : 18.02.19
Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் : 1830hrs | Time to நேரம் வரை : 2400hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.2.19 | Time நேரம் : 0030hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.02.19 | Time நேரம் : 1300hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 38 Kms, South East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி The Sub Registrar Office Thiruporur, Kanchipuram Dist.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Moorthy | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் District Inspection Cell Office. | (g) Address : முகவரி District Inspection Cell. Collector Office Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. N. Palani s/o M. Natesan
Sub-Registrar
Thiruporur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

An amount of Rs 102250/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Judy Abigail Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Information sent to the Complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.2.19
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1500 hrs.

Name: பெயர் S. Judy Abigail
Rank: நிலை Inspector of Police No.
S.I.C / DVAC

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.04/2019. சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் சட்ட பிரிவு 7 ஊ.த. (திருத்தம்) சட்டம். 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி பின்வருமாறு.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் (S.ஜூடி. அபிகேயில்) 19.02.2019-ம் தேதி அதிகாலை 00.30 மணியளவில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.கி.மூர்த்தி அவர்கள் என்னிடம் அளித்த புகாரின் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

திரு.கி.மூர்த்தி அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு :

"

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.கி.மூர்த்தி,<br>துணை ஆட்சியர் / மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர்,<br>காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்,<br>காஞ்சிபுரம். | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

அ/92/2019 நாள் - 18.02.2019

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தனிக்கை - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், எண்.29, தெற்கு மாட வீதி, (திருப்போரூர் காவல்நிலையம் அருகில்) இயங்கி வரும் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நாள் 18.02.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

-----

காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 18.02.2019 அன்று மாலை 06.30 மணி முதல் இரவு 12.00 மணி வரை

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், எண்.29, தெற்கு மாட வீதி, (திருப்போரூர் காவல்நிலையம் அருகில்) இயங்கி வரும் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூ.1,02,250/- (ரூபாய் ஒரு லட்சத்து இரண்டு ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மற்றும் கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் ஆகியவைகள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது.

மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- கி.மூர்த்தி
மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர்,
காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்
மாவட்டங்கள், காஞ்சிபுரம்."

Sir,

Received the complaint and registered a case in DVAC HQS, Cr No 4/2019 u/s 102 CrPC & Sec 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 this day at 1300 hrs. Sd/- S.JUDY ABIGAIL, 19/02/2019

<u>இருதுறை கூட்டுக்தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு :</u>

காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வு குழு அலுவலருடன் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு, துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவினர் இணைந்து இன்று 18.02.2019-ம் தேதி காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், எண்.29, தெற்கு மாட வீதி, (திருப்போரூர் காவல்நிலையம் அருகில்) இயங்கி வரும் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை.

---

| | | |
|---|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. | திரு.கே.மூர்த்தி,<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,<br>காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்<br>மாவட்டங்கள். |
| | 2. | திரு.ம.குமரகுருபரன்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 3. | திரு.தி.கந்தசாமி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 4. | திருமதி.சா.ஜூடி அபிகெய்ல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுபிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |
| | 5. | திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர், எண்.29, தெற்கு மாட வீதி, (திருப்போரூர் காவல்நிலையம் அருகில்) இயங்கி வரும் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கும் மற்றும் வில்லங்க சான்றிதழ்கள் பெறுவதற்கும் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த நம்பகமான தகவல் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருக்கு தகவல்

தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை கூட்டுத்தணிக்கை நடத்திட முடிவு செய்து இன்று 18.02.2019ந் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.கே.மூர்த்தி மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்ணகாணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப்பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுவினருடன் இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2) மேற்படி திருப்போரூர் சார் பதிவாளர் அலுவலகம் எண்.29, தெற்கு மாட வீதி திருப்போரூர்-603 110 என்ற முகவரியில் கிழக்கு மேற்காக செல்லும் தெற்கு மாட வீதியின் தெற்கு நோக்கி செல்லும் வழியில் கிழக்கு நோக்கி தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய கட்டிடத்தில் அமைந்துள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும் பார்வையாளர்களுக்கான இருக்கைகள் கொண்ட அறையும், அதனை தொடர்ந்து உள்ளே நுழைந்ததும் கிழக்கு நோக்கி சார் பதிவாளர் இருக்கையும் மற்றும் சார் பதிவாளர் இருக்கைக்கு வலது பக்கத்தில் கிழக்கு நோக்கி இணை சார் பதிவாளர் இருக்கையும் இருந்தது. அதனை தொடர்ந்து சார்பதிவாளர் இருக்கைகளுக்கு வடக்கு பக்கத்தில் தெற்கு நோக்கி பதிவு ஆவணங்களை திரும்ப அளிக்கும் அறையும் மற்றும் அதனை அடுத்து நிரந்தர பதிவு ஆவணங்கள் வைப்பு அறையும் உள்ளது. மேலும் சார் பதிவாளர் அறைக்கு தென் பகுதியில் கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய கணிணி அறை மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேலும் கணிணி அறைக்கு எதிரில் இரண்டு தனித்தனியாக கதவுகளுடன் கூடிய கழிவறைகள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அதனை தொடர்ந்து அந்த அறையில் திருமண பதிவு, வில்லங்க சான்று பதிவேடுகள் வைப்பு அறை காணப்படுகிறது.

3) மேற்படி அலுவலகத்தில் தணிக்கையின் போது (1) திரு. என்.பழனி, சார் பதிவாளர் (முதல்நிலை), திருப்போரூர் அவர்களும், (2) திரு.கோ.சங்கர், த/பெ.ஆர்.கோவிந்தராஜ், முதுநிலை உதவியாளர், வில்லங்க சான்று வழங்கும் அறையிலும் (3) திரு.பெ.கார்த்திகேயன், த/பெ.பெருமாள், (அலுவலக உதவியாளர்) பதிவு

ஆவணத்திற்கு முத்திரையிடும் உதவியாளர் (4) திருமதி.உஷா க/பெ. சஞ்சீவ்குமார், கணினி தொகுப்பாளர், (4) திரு.எம்.கணேஷ் த/பெ. ஜி.மனோகரன் கணினி தொகுப்பாளர், ஆகியோர் பணியில் இருந்தனர்.

4) மேற்படி வில்லங்க சான்று ஆவண வைப்பு அறையில் சார் பதிவாளர் திரு.என்.பழனி தெற்கு நோக்கி அமர்ந்திருந்தார். சார் பதிவாளர் திரு.என்.பழனி அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க தனது சட்டை மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.600/- இருந்தது. பின்னர் அந்த பணம் குறித்து சார்பதிவாளர் திரு.என்.பழனி அவர்களிடம் கேட்ட போது மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். இது குறித்து தனி நபர் ரொக்கை கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில், இன்றைய தேதியில் (18.02.2019) மேற்படி சார் பதிவாளர் திரு.என்.பழனி தனது சொந்த பணம் ரூ.600/- என்று பதிவு செய்துள்ளார். எனவே மேற்படி ரூ.600/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

5) மேலும் திரு.என்.பழனி அவர்கள் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.1000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 01 | Rs.500 |
| 2 | Rs.100 x 05 | Rs.500 |
| | **Total** | **Rs.1000** |

6) பின்னர் மேற்படி பணம் ரூ.1000/- குறித்து சார்பதிவாளர் திரு.என்.பழனி அவர்களிடம் கேட்ட போது எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

7) அதனை தொடர்ந்து சார் பதிவாளர் திரு.என்.பழனியிடம் அவரது கை பையை கேட்டதற்கு மேற்படி வில்லங்க சான்று ஆவண வைப்பு அறையில் அவரது இருக்கைக்கு கீழே இருந்து கறுப்புநிற ரெக்சின் பேக்கை எடுத்து தனது மேஜையின் மீது வைத்தார். அந்த கறுப்பு நிற ரெக்சின் குறித்து சார் பதிவாளர் திரு.என்.பழனி அவர்களிடம் கேட்ட போது அந்த பேக் தன்னுடையது என்று தெரிவித்தார். பின்னர் மேற்படி கறுப்பு நிற ரெக்சின் பேக்கை சார் பதிவாளர் திரு.என்.பழனி அவர்கள் திறந்து காண்பிக்க, அந்த பேக் இரண்டு பெரிய அறைகளையும் மற்றும் ஒரு சிறிய அறையும் கொண்டதாக காணப்பட்டது. மேற்படி கறுப்புநிற பேக்கின் பெரிய அறையில் மஞ்சள் நிற டேப்பால் சுற்றப்பட்ட நிலையில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.50,000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 100 | Rs.50,000 |

9) பின்னர் அந்த பணம் குறித்து திரு.என்.பழனி அவர்களிடம் கேட்ட போது அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளர் திரு.என்.பழனி லஞ்சமாக வாங்கிய பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி கறுப்புநிற பேக்கின் மற்றொரு அறையில் மடித்த நிலையில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.5,000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 02 | Rs.4,000 |
| 2 | Rs.500 x 01 | Rs.500 |

| | | |
|---|---|---|
| 3 | Rs.100 x 05 | Rs.500 |
| | **Total** | **Rs.5,000** |

10) பின்னர் அந்த பணம் குறித்து திரு.என்.பழனி அவர்களிடம் கேட்ட போது அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் சார் பதிவாளர் திரு.என்.பழனி லஞ்சமாக வாங்கிய பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

11) மேலும் கணினி அறையை தொடர்ந்து வில்லங்க சான்று வைப்பு அறையில் உள்ள கணினியில் பணியில் இருந்த உதவியாளர் திரு.சங்கர் என்பவரிடம் அவரது சொந்த பணம் குறித்து விசாரித்த போது தன்னிடம் சொந்த பணம் ஏதுவும் இல்லையென்று தெரிவித்தார். இது குறித்து தனி நபர் ரொக்க கையிருப்பு பதிவேட்டில் இன்றைய தேதியில் (18.02.2019) பார்வையிட்ட போது கையிருப்பு குறித்து பதிவு ஏதும் செய்யவில்லை. மேற்படி திரு.சங்கர், உதவியாளர் அமர்ந்திருந்த இருக்கைக்கு கீழே தரையில் ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியே மடித்த நிலையில் காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.6000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 03 | Rs.6,000 |

12) மேற்படி பணம் குறித்து உதவியாளர் திரு.சங்கர் அவர்களிடம் விசாரிக்க தனக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறினார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி அறையின் வடக்கு பக்கத்தில் காணப்பட்ட கடப்பா கல் அலமாரியில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த அலமாரியின் இரண்டாவது வரிசையில் மேலேயிருந்து இரண்டாவது அறையில் ரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட நிலையில் பணம்

காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.30,400/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 05 | Rs.10,000 |
| 2 | Rs.500 x 21 | Rs.10,500 |
| 3 | Rs.200 x 07 | Rs.1,400 |
| 4 | Rs.100 x 83 | Rs.8,300 |
| 5 | Rs.50 x 03 | Rs.150 |
| 6 | Rs.20 x 02 | Rs.40 |
| 7 | Rs.10 x 01 | Rs.10 |
| | **Total** | **Rs.30,400** |

13) மேற்படி பணம் குறித்து உதவியாளர் திரு.சங்கர் அவர்களிடம் விசாரிக்க தனக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறினார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

14) தொடர்ந்து மேற்படி வில்லங்க சான்று ஆவண வைப்பு அறையில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள மர ரேக் அருகே நின்றிருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் தியாகராஜன்,த/பெ.மனோகரன் என்றும் தான் இந்த சார் பதிவாளர் அலுவலக இரவு நேர காப்பாளர் பணியை செய்து வருவதாக தெரிவித்தார். மேற்படி நபரிடம் உள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்ட் மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.2650/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.2000 x 01 | Rs.2,000 |
| 2 | Rs.500 x 01 | Rs.500 |
| 3 | Rs.50 x 02 | Rs.100 |
| 4 | Rs.20 x 01 | Rs.20 |
| 5 | Rs.10 x 03 | Rs.30 |
| | **Total** | **Rs.2,650** |

15) பின்னர் அந்த பணம் குறித்து திரு. தியாகராஜன் அவர்களிடம் கேட்ட போது அவர் எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த பணம் லஞ்சப் பணமாக இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

16) மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் கணிணி அறையின் உள்ளே நுழைந்ததும் இடது பக்கத்தில் ஜெராக்ஸ் மிஷன் மரத்திலான மேஜையில் காணப்பட்டது. அந்த ஜெராக்ஸ் மிஷனின் பின்புறம் ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியே மடித்த நிலையில் கீழே கிடந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்த போது ரூ.1,200/- இருந்தது. அந்த நோட்டுக்களின் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 02 | Rs.1,000 |
| 2 | Rs.100 x 02 | Rs.200 |
| | **Total** | **Rs.1,200** |

17) இந்த பணம் குறித்து கணிணி அறையில் பணியில் இருந்த கணிணி தகவல் தொகுப்பு பணியாளர்கள் திருமதி.உஷா மற்றும் திரு.எம்.கணேஷ் ஆகியோரிடம் கேட்டதற்கு தங்களுக்கு இந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என கூறினார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

18) இதே கணிணி அறையில் நின்றிருந்த இரண்டு பெண்களில் ஒருவரை முதலில் கேட்க தனது பெயர் திருமதி.எஸ்.வசந்தி என்றும் திருப்போரூரில் உள்ள ஜெயம் டாக்குமெண்ட் டைப்பிங் சென்டரில் உதவியாளராக பணி புரிந்து வருவதாகவும் இன்று தங்களது அலுவலகத்திலிருந்து நான்கு ஆவணங்களை (ஆவண எண்கள்.2026/2019 முதல் 2028/2019 மற்றும் 2048/2019) திருப்போரூர் சார் பதிவக அலுவலகத்தில் பதிவு செய்ததாகவும் அதற்காக சார் பதிவாளர் திரு.பழனி அவர்கள் கேட்ட ரூ.6,000/- வேறு வழியின்றி சார் பதிவாளர் கட்டாயப் படுத்தியதன் பேரில் இலஞ்சமாக கொடுத்ததாகவும் தெரிவித்தார். அதை சார் பதிவாளர் திரு.பழனி இன்று (18.02.2019) மாலை சுமார் 6.30

மணியளவில் வாங்கிக் கொண்டதாக தெரிவித்தார். இந்த விவரத்திற்கு மேற்படி திரு.எஸ்.வசந்தி மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரிடம் எழுத்து பூர்வமான தனது வாக்குமூலத்தை அளித்தார். மற்றோரு பெண் தனது பெயர் திருமதி.தையல்நாயகி என்றும் மேற்படி ஜெயம் டாக்குமெண்ட் சென்டரில் உதவியாளராக மேற்படி திருமதி.எஸ்.வசந்தி அவர்களுடன் வேலை பார்ப்பதாக தெரிவித்தார். மேற்படி வசந்தி கூறியதைப் போலவே இவரும் கூறி மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரிடம் தனது எழுத்து மூலமான வாக்குமூலத்தை தாக்கல் செய்தார்.

19) மேற்படி சார் பதிவாளர் இருக்கைக்கு வடக்கு புறத்தில் உள்ள பதிவு ஆவணங்களை திருப்பி அளிக்கும் அறையில் நின்றிருந்த ஒரு பெண்மணியை இந்த அலுவலகம் வந்ததற்கான காரணம் குறித்து கேட்க தன் பெயர் திருமதி.ஹேமவாணி க/பெ தனஞ்செயா என்றும் திருப்போரூரில் பதிவு ஆவணங்கள் தயார் செய்து திருப்போரூர் சார் பதிவக அலுவகத்தில் பதிவு செய்து கொடுத்து வருவதாகவும் இன்றைய தேதியில் (18.02.2018) 10 ஆவணங்களை பதிவு செய்ததாக தெரிவித்தார். அவ்வாறு பதிவு செய்யும் போது ஒரு சிறு தொகையை சார் பதிவாளருக்கு வழங்குவது வழக்கம் என்று தெரிவித்தார். அவரிடம் உள்ள பணத்தைப் பற்றிக் கேட்க தானாக முன் வந்து ரூ.6,000/- எடுத்து கொடுத்தார். அதன் விபரங்கள் பின்வருமாறு.

| வரிசை எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Rs.500 x 12 | Rs.6,000 |

20) இந்தப் பணத்திற்கு தகுந்த காரணத்தை திருமதி.ஹேமவாணி கூறாததால் அப்பணம் சார் பதிவாளருக்கு வழங்க வைத்திருந்த லஞ்சப் பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக திருமதி.ஹேமாவாணி அவர்கள் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரிடம் தானாக முன் வந்து எழுத்துபூர்வமான தனது வாக்குமூலத்தை தாக்கல் செய்தார்.

21) மேலும் இந்த சார் பதிவாளர் திரு.என்.பழனி அவர்களிடம் அலுவலக நிரந்தர இருப்புத்தொகை குறித்து கேட்டதற்கு பணம் ரூ.250/- (Rs.100 x 2 = Rs.200/- ; Rs.50 x 01 = Rs.50/-) எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் “எச்” பதிவேட்டில் சரிபார்த்து அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் பதிவுத் துறை தலைவர் சுற்றறிக்கை ந.க. எண்.6128/சி1/2019 நாள் 13.02.2019-ன்படி இன்றைய தேதியிலிருந்து (18.02.2019) பணமில்லா பரிவர்த்தனை தொடங்கியதால் அலுவலகத்தில் ரொக்கமாக கட்டணம் எதுவும் வசூல் செய்யவில்லை என்றும் அதனால் “எச்” பதிவேட்டில் நிரந்தர வைப்பு தொகை தவிர வேறு பதிவுகள் எதுவும் செய்யப்படவில்லையென்று உதவியாளர் திரு.ஜி.சங்கர் தெரிவித்தார். மேலும் இன்றைய தேதியில் (18.02.2019) திருப்போரூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மொத்தம் 102 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் சார் பதிவக ஆவண எண் 1981/2019 முதல் 2082/2019 வரை பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு

| வரிசை எண் | ஆவணங்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது அதிகார பத்திரம் | 2 |
| 2 | ரத்து பத்திரம் | 1 |
| 3 | கட்டுமான உடன்படிக்கை | 9 |
| 4 | பிழை திருத்தப்பத்திரம் | 5 |
| 5 | அடமான பத்திரம் | 22 |
| 6 | பாகப்பிரிவினை பத்திரம் | 1 |
| 7 | விற்பனை உடன்படிக்கை பத்திரம் | 1 |
| 8 | விற்பனை ஆவணம் | 55 |
| 9 | தான பத்திரம் | 6 |
| | மொத்தம் | 102 |

22) மேலும் படை வீரர் கொடிநாள் வசூல் ரசீதுகளை ஆய்வு செய்ததில் அவைகளை முறையான வகையில் பராமரிக்கவில்லை. மேலும், விவரங்கள் ஏதும் பூர்த்தி செய்யாமலும், முறையான தகவலை குறிப்பிடாமலும் இருந்தது. எனவே, மேற்படி ரசீதுகளின் அடிக்கட்டு வரிசை எண்.4271701 முதல் 42718000 வரையிலும், வரிசை

எண்.1211601 முதல் 1211700 வரையிலும், வரிசை எண்.1211701 முதல் 1211800 வரையிலும் அடுத்து வரிசை எண்.1211802 முதல் 12118900 வரையிலும் அதனுள் வரிசை எண்.1211852 முதல் 12118900 வரை செலுத்துபவருக்கு கொடுக்க வேண்டிய ரசீதும் உள்ளது. மேற்கண்ட ரசீதுகளில் பணம் செலுத்தியபவர் விவரம் முறையாக குறிப்பிடவில்லை. மேற்கண்ட படை வீரர் கொடிநாள் வசூல் ரசீதுகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேற்படி கூட்டுத் தணிக்கையின் போது மொத்தம் ரூ.1,02,250/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

23) இருதுறை கூட்டு தணிக்கையின்போது எந்த உடமைக்களுக்கும், ஆவணங்களுக்கும் சேதம் ஏற்படவில்லை. திருப்போரூர் சார் பதிவாளர் அலுவலக அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ இடையூறு ஏற்படவில்லை. சோதனையின் போது பெண் காவல் ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவலர்கள் சோதனைக்கு உதவினர். இந்த சோதனை 18.02.2019-ம் தேதி மாலை 6.30 மணிக்கு தொடங்கி 18.02.2019-ம் தேதி இரவு 12.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.கி.மூர்த்தி,
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளுர் மாவட்டங்கள்.

ஒப்பம்/-திரு.ம.குமரகுருபரன்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- திரு.தி.கந்தசாமி,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.சா.ஜூடி அபிகேய்ல்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.கே.எஸ்.அனிதா,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.என்.பழனி
சார் பதிவாளர் (முதல்நிலை)
சார் பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர்.

ஒப்பம்/-கோ.சங்கர்,
உதவியாளர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர்.

ஒப்பம்/-எம்.தியாகராஜன்,
இரவுக்காவலர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
திருப்போரூர்.